# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

********

முறையீட்டு மனு எண். 567/2016/பே–1

ஆணை நாள். 30–07–18

திரு. என். பால்ராஜ்,
த/பெ. நாடான்கண்ணு நாடார்,
16/72 உசரவிளை,
புத்தளம் அஞ்சல்,
கன்னியாகுமரி மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
புத்தளம் பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். --- எதிர் மனுதாரர்

ஆணை.

கன்னியாகுமரி மாவட்டம், புத்தளம் பேரூராட்சி, உசரவிளை பகுதியினை சேர்ந்த திரு.N. பால்ராஜ், த/பெதிரு நாடான்கண்ணு நாடார் தனது 31.05.2016ம் நாளிட்ட முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் 15.06.2016ல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி முறையீட்டு மனுவிற்கு முறையீட்டு மனு எண். 567/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர், வீட்டு எண். 16/72–3 ல் தான் குடியிருந்த பழைய வீட்டினை புதுப்பித்த போது கட்டிடத்தினை விரிவுபடுத்த பேரூராட்சிக்கு உரிய தொகையினை செலுத்தி அனுமதி பெறப்பட வேண்டும் என தெரிவித்ததைத் தொடர்ந்து தனது வீட்டினை புதுப்பிக்க வரை படம் தயாரித்து பேரூராட்சியில் கொடுத்து அனுமதி பெற்ற பின்னர் தனது வீட்டின் எண்ணினை பேரூராட்சியால் 16/72–11 என திருத்தி பழைய சொத்து வரியான ரூ. 78/–லிருந்து ரூ.364/–க்கு உயர்த்தியதாகவும், தான் புதுப்பித்துள்ள வீட்டின் பரப்பளவு 550 சதுர அடி எனவும் தெரிவித்துள்ளார். ஆனால் இதே பேரூராட்சி பகுதியினை சேர்ந்த சொத்தவிளை என்ற பகுதியில் 17/15 எண் கொண்ட வீட்டினை திரு.N. தனபால் என்பவர் தனது பழைய வீட்டினை இடித்து சுமார் 2,500 சதுரஅடியில் வரைபடம் எதனையும் பேரூராட்சிக்கு அளிக்காமலும் அதற்கான அனுமதியும் பெறாமலும் கட்டியுள்ள வீட்டிற்கு வீட்டின் பழைய

எண்ணை திருத்தம் செய்து 17/15–1 என எண்ணிட்டு சொத்து வரியாக ரூ.198/–மட்டும் விதித்துள்ளதாகவும், இந்நிகழ்விற்காக மேற்படி நபரிடமிருந்து பேரூராட்சி செயல் அலுவலர் பெரும் தொகையினை லஞ்சமாக பெற்றுள்ளதாகவும் இது குறித்து விசாரணை செய்திட வேண்டி தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 21.06.2016–ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண்.73/2016/அ.1/நாள் 30.06.2016ன்படி மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்:-

மேற்படி புகார் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, கன்னியாகுமரி மாவட்டம், புத்தளம் பேரூராட்சி, சொத்தவிளை பகுதியில் வீட்டு எண்.17/15 என்ற எண் கொண்ட வீட்டிற்கு அதன் உரிமையாளர் திரு என்.தனபால் என்பவர், புத்தளம் பேரூராட்சியில் முதல் தளத்திற்கு மட்டுமே வரைபட அனுமதி வழங்கப்பட்டு வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி திரு.என்.தனபால், என்பவர் வீட்டினை விரிவாக்கம் செய்வதற்கு பேரூராட்சியில் எவ்வித வரைபட அனுமதியும் சமர்ப்பிக்கவில்லை எனவும், மேலும் கட்டிட விரிவாக்கம் செய்யப்பட்டு பேரூராட்சியில் அனுமதி பெறாமல் உள்ள அனைத்து நபர்களுக்கும் மன்ற தீர்மானத்தின்படி நோட்டீஸ் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளதாகவும் மனுதாரர் முறையாக வரைபடம் சமர்ப்பிக்கும்போது வரி நிர்ணயம் மாற்றி அமைக்கப்படும் என புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் இது சம்பந்தமான அனைத்துக் கோப்புகளும் புத்தளம் பேரூராட்சியின் முன்னாள் வரி வசூலர் திரு. இராதாகிருஷ்ணன் என்பவர் வரி ஏய்ப்பு செய்துள்ளதாக வரப்பெற்ற புகார் மனுக்கள் மீதான கோப்புகள் லஞ்ச ஒழிப்புத்துறைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், மேற்படி கோப்புகள் லஞ்ச ஒழிப்புத்துறையிடமிருந்து பெறப்பட்டதும் கோப்புகள் சமர்ப்பிக்கப்படும் எனவும் தனது அறிக்கையில் புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 14.07.2016ம் நாளிட்ட அழைப்பாணையின்படி மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 12.08.2016ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராக முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

12.08.2016ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.என்.பால்ராஜ் தனது முறையீட்டு மனு குறித்த விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“......31.05.2016ம் நாளிட்ட முறையீட்டு மனு தன்னால் அனுப்பப்பட்டது எனவும் தான் தனது பழைய ஓலை குடிசை வீட்டை இடித்து புதுப்பித்ததாகவும், தற்போது புதுப்பித்த வீட்டின் பரப்பளவு 550 சதுர அடியாகும் எனவும் தெரிவித்துள்ளார். முதலில் சொத்து வரியாக ரூ.78/– ஆக இருந்ததாகவும், தற்போது ரூ.354/– ஆக உயர்த்தி விட்டதாகவும் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார். ஆனால் இதே பேரூராட்சியில் சொத்தவிளை என்ற இடத்தில் 17/15 என்ற எண் கொண்ட வீட்டை திரு.தனபால் என்பவர் இடித்து புது வீட்டை கட்டியுள்ளதாகவும் அதன் தற்போதைய எண்.17/15/1 எனவும் இதன் மொத்தப் பரப்பளவு 2,500 சதுர அடி எனவும் இதற்கு ரூ.218/– சொத்து வரி விதித்துள்ளதாகவும், தான் தனது மனுவில் இதனை ரூ.198/– என குறிப்பட்டிருந்ததாகவும், தற்போது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகவலின்படி ரூ.218/– ஆகும் எனவும் தெரிவித்துள்ளார். முதலில் தன்னிடம் சொத்து வரியினை குறைப்பதாக கூறி ரூ.5,000/– பெற்றதாகவும் தான் இந்த மனுவினை உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிய பிறகு ரூ.2500/–ஐ தனி நபர் மூலம் திருப்பி கொடுத்துவிட்டதாகவும், மீதி ரூ.2,500/– வரியாக

எடுத்துக் கொண்டதாகவும் தெரிவித்துள்ளார். தனக்கு 550 சதுர அடிக்கு ரூ.354/– வரியாக நிர்ணயம் செய்துள்ளதாகவும், ஆனால் திரு. தனபால் வீட்டிற்கு 2,500 சதுர அடிக்கு ரூ 218/– நிர்ணயம் செய்துள்ளதாகவும், எல்லோருக்கும் ஒரே மாதிரியான தீர்மானம் செய்யவேண்டும் என கேட்டுக் கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். தான் முறையாக பேரூராட்சியில் வீடு கட்டுவதற்கான கட்டிட வரைபட அனுமதி பெற்று வீடு கட்டியுள்ளதாகவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இந்த வரி வதிப்பு குறித்து பேசும் போது வரி விதிப்பாளராக இருந்த திரு.சந்தோஷ்குமார், என்பவர் தற்போது இரணியல் பேரூராட்சியில் பணிபுரிந்து வருவதாகவும், அவர்தான் வரி விதிப்பு குறித்து முரண்பாடாக செயல்பட்டதாக அறிய முடிந்தது எனவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 22.11.2016ம் நாளிட்ட அழைப்பாணையில் புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலரை மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தில் தனது விளக்கத்தினை பதிவு செய்ய 27.12.2016ல் ஆஜராகத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

27.12.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர் திரு R. அன்பழகன் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் 01.09.2016 முதல் புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிவதாகவும், இதற்கு முன்னர் தொட்டியம் பேரூராட்சியில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்ததாகவும், தெரிவித்துள்ளார். திரு.பால்ராஜ் அவர்களின் 31.05.2016 ம் நாளிட்ட மனுவில் உள்ள செய்திகள் தனக்கு தெரியும் எனவும் இது தொடர்பாக தனக்கு முன்பு இருந்த செயல் அலுவலர் 30.06.2016ல் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் வரி வசூலராக இருந்த திரு. இராதாகிருஷ்ணன் வரி ஏய்ப்பு செய்ததாக இலஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் உள்ளதாகவும், திரு.தனபால் என்பவருடைய வீட்டிற்கு சொத்து வரி ரூ.198/– நிர்ணயம் செய்தது சரிதான் எனவும், மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் 550 சதுர அடியுள்ள அவரது வீட்டிற்கு சொத்து வரி ரூ.364/– நிர்ணயித்துள்ளது சரிதான் எனவும், மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் திரு.தனபால் என்பவருடைய வீட்டைப் பொறுத்தவரை அவர் ஏற்கனவே இருந்த வீட்டை விரிவுபடுத்தியுள்ளதாகவும், விரிவுபடுத்தப்பட்ட பகுதிக்கு இன்னமும் வரி விதிப்பு செய்யப்படவில்லை எனவும் சம்பந்தப்பட்ட கோப்புகள் இலஞ்ச ஒழிப்புத் துறையினரிடம் உள்ளது என செயல் அலுவலர் திருமதி. ருக்மணி தனது 30.06.2016ம் நாளிட்ட விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளது சரி எனவும் தெரிவித்துள்ளார். தான் திரு.தனபாலிடம் இது சம்பந்தமாக கோரியமைக்கு அவர் ஏற்கனவே திரு.இராதாகிருஷ்ணனிடம் கட்டிட அனுமதிக்காக வரைபடம் கொடுத்ததாகவும் அவர் இதுவரை கட்டிடம் விரிவாக்கம் செய்யப்பட்டமைக்கு உரிய அனுமதி பெற்றதற்கான ஆவணங்கள் எதையும் சமர்ப்பிக்கவில்லை எனவும், தற்போது அவருக்கு உரிய அறிவிப்பு அனுப்பி விதிகளின்படி நடவடிக்கை எடுத்து சொத்து வரி உரிய முறையில் நிர்ணயம் செய்து அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர் 27.12.2016ம் நாளைய வாக்குமூலத்தின்படி தனது அறிக்கையினை ந.க.எண். 73/2016/அ.1/நாள் 29.12.2016ன்படி இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

புத்தளம் பேரூராட்சியில் இருந்து இலஞ்ச ஒழிப்புத்துறையினரால் எடுத்துச் செல்லப்பட்ட ஆவணங்களில் தற்போது (1) வரி விதிப்பு பதிவேடு 2012–14 (2)பிளான் அப்ளிகேஷன் ரெஜிஸ்டர் 2012–14 மற்றும் (3) பிளான் அப்ரூவல் ரிஜிஸ்டர் 2012–14ஆகிய மூன்று பதிவேடுகள் மட்டும் தணிக்கைக்காக பெறப்பட்டு, தணிக்கை நிறைவுபெற்று தற்போது அலுவலகத்தில் பெறப்பட்டுள்ளதாகவும், மேற்படி பதிவேடுகளை கூர்ந்தாய்வு செய்ததில்

புகார்தாரர் திரு என்.பால்ராஜ் அவர்கள் 17/15 எண்ணுடைய தனது வீட்டை விரிவாக்கம் செய்வதற்கு கட்டிட அனுமதி பெறப்படவில்லை என்பது உறுதியாகிறது எனவும், 27.12.2016ம் தேதிய அறிவுரைகளின்படி திரு என்.தனபால் அவர்களுக்கு உரிய கட்டணம் வசூலித்து கட்டிட அனுமதி அளித்து சொத்து வரியினை உயர்த்தி நிர்ணயம் செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் மேற்கண்ட பணியினை முடித்து தனது அறிக்கையினை சமர்ப்பிப்பதாக புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண்.73/2016/அ.1/நாள் 17.08.2017ன் மூலம் மேற்படி முறையீட்டு மனுதொடர்பான தனது கூடுதல் அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், புத்தளம் பேரூராட்சியில் திரு.பால்ராஜ், த/பெ திரு.நாடான்கண்ணு நாடார் என்பவருக்கு வீடு கட்ட அனுமதி கோரி சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் வீடு கட்டப்படும் இடம் CRZ பகுதியில் கடற்கரை பகுதியிலிருந்து 500 மீட்டருக்குள் வருவதால் வரைபட அனுமதி வழங்காமல் கட்டப்பட்டுள்ள கட்டிடத்திற்கு மேற்கூரை வரி நிர்ணயம் செய்ய செலுத்துச் சீட்டு எண். 470/2015-16 நாள்.10.08.2015 ன்படி ரூ.2,619/- வசூல் செய்து கட்டிடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

திரு தனபால், த/பெ திரு.நாடான்கண்ணு நாடார் என்பவர் கட்டியுள்ள கட்டிடம் CRZ பகுதியில் கடற்கரையிலிருந்து 500 மீட்டருக்குள் வருவதால் கட்டிடத்திற்கு வரி விதிப்பு மட்டும் செய்யப்பட்டுள்ளதாகவும், புத்தளம் பேரூராட்சி வரி விதிப்பு பதிவேடுகளின்படி திரு.பால்ராஜ் என்பவர் கட்டியுள்ள கட்டிடத்திற்கு 500 சதுர அடி கணக்கிடப்பட்டு வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும், திரு. தனபால் கட்டியுள்ள கட்டித்திற்கு 450 சதுர அடி என கணக்கிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் கட்டியுள்ள கட்டிடங்கள் CRZ பகுதியில் கடற்கரையிலிருந்து 500 மீட்டருக்குள் வருவதால் கட்டிட வரைபட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை எனவும் திரு பால்ராஜ் என்பவர் கட்டியுள்ள கட்டிடத்திற்கு 2015-16ம் வருடம் வரிவிதிப்பு எண்.4048, நாள்02.09.2015ன்படி வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.தனபால் என்பவர் கட்டியுள்ள கட்டிடத்திற்கு 2014-15ம் வருடம் வரி விதிப்பு எண்.3992 நாள் 22.09.2014ன்படி வரி விதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 22.09.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் முறையீடு தொடர்பாக புத்தளம் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலரின் வாக்குமூல நகல் மற்றும் தற்போதைய செயல் அலுவலரின் விளக்க அறிக்கையின் நகல்களை முறையீட்டு மனுதாருக்கு அனுப்பிவைக்கப்பட்டு அதன் மீதான ஆட்சேபணை/விளக்கத்தினை ஒரு வார காலத்திற்குள் தெரிவிக்க ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் தனது 06.10.2017ம் நாளிட்ட கடிதத்தில் மேற்படி புத்தளம் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் விளக்க அறிக்கையின் மீதான தனது ஆட்சேபணையினை கீழ்கண்டவாறு தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் திரு. என்.பால்ராஜ் தனது கடிதத்தில் மேற்படி புத்தளம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் தற்போதைய செயல் அலுவலரின் விளக்க கடிதம் இரண்டுக்குமிடையே வேறுபாடுகள் உள்ளதாகவும், திரு. தனபால் என்பவரின் வீடு தரைதளம், முதல் தளம் என 2,500 சதுர அடிக்கு மேல் உள்ளதாகவும் மேற்படி வீடு CRZ பகுதிக்குள் வராது எனவும் கடற்கரையிலிருந்து சுமார் 800 மீட்டர் தூரத்தில் உள்ளது எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 19.10.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் முறையீட்டு மனுதாரரின் முறையீடு தொடர்பாக புத்தளம் பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலரின்

வாக்குமூலம், மற்றும் தற்போதைய செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் மீதான முறையீட்டு மனுதாரரின் ஆட்சேபணை/விளக்க அறிக்கையின் நகல்களை நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு அனுப்பிவைக்கப்பட்டு, மனுதாரர் குறிப்பிட்டுள்ள விவரங்கள் தொடர்பாக விரிவாக ஆய்வு மேற்கொண்டு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் பிரத்யேக குறிப்புகளுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கை சமர்ப்பிக்கத் தெரிவித்து 2014ம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது ந.க.எண். 6100/2017/ப.4/நாள் 09.07.2018ன் மூலம் தனது ஆய்வறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

நாகர்கோவில் மண்டலம், கன்னியாகுமரி மாவட்டம், புத்தளம் பேரூராட்சி உசரவிளை திரு.என்.பால்ராஜ், அவர்களின் முறையீட்டு மனு தொடர்பாக உரிய தல ஆய்வு மேற்கொண்டும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள விவரங்கள் குறித்து விரிவாக நேரடி விசாரணை மற்றும் அலுவலக ஆவணங்கள் ஆய்வு செய்தும் தனது அறிக்கையினை சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ளார்.

மேற்படி புகார் மனு ஆய்வு செய்யப்பட்டதில் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமம், அவர்களின் கடித ந.க.எண். 1031/99/நா.உ.தி.கு/நாள்.23.02.2002ன்படி, தெங்கம்புதூர் கிராமம் சர்வே எண்.427/12ல் அமைந்துள்ள திரு.தனபால் என்பவரின் வீடானது Mixed Residential use Zone என்னும் பகுதியில் உள்ளதாகவும், மேற்படி பகுதியானது கடற்கரையிலிருந்து சுமார் 700 முதல் 800 மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வீட்டின் அளவீடுகள் குறித்து புத்தளம் பேரூராட்சிஅலுவலக ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் பேரூராட்சி பகுதிகளில் சொத்து வரி விதிக்கப்படாத மற்றும் குறைவாக சொத்து வரி விதிக்கப்பட்ட வீடுகள்/கட்டிடங்களை கண்டறிந்து வரி நிர்ணயம் செய்தல் மற்றும் குறைவாக வரி நிர்ணயிக்கப்பட்டுள்ளதை திருத்தியமைத்து நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.2068/2016/இ5/நாள்.31.07.2016ன் படியும், நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித ந.க.எண். 4062/2017/ப.8/நாள்.04.10.2017ன்படியும் நாகர்கோவில் மண்டலத்திற்குட்பட்ட பேரூராட்சிகளில், பேரூராட்சியின் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மற்றும் வரைபட அனுமதியின்றி விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள கட்டிடங்களை கண்டறிந்து வரி விதிப்பு செய்ய அறிவுறுத்தப்பட்டதின் அடிப்படையில் புத்தளம் பேரூராட்சியில் திரு. தனபால், த/பெ.நாடான்கண்ணு நாடார் என்பவருக்கு சொந்தமான 17/15-1 எண் கொண்ட கட்டிடத்தினை அளவீடு செய்யப்பட்டதில் 3,196 சதுர அடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பேரூராட்சி செயல் அலுவலரால் ஏற்கனவே இக்கட்டிடத்திற்கு 450 சதுர அடிக்கு சொத்து வரி ரூ.198/-நூலக வரி ரூ20/- ஆகமொத்தம் ரூ.218/- வரியாக விதிக்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள 2,746 சதுர அடி கூடுதல் கட்டிடத்திற்கும் தற்போது வரி விதிப்பு செய்யப்பட்டு சொத்து வரி ரூ.1210/- நூலக வரி ரூ.122/-என கணக்கிடப்பட்டு ஏற்கனவே இருந்த சொத்துவரியுடன் கூடுதலாக சேர்க்கப்பட்டு 2018-19 ஆண்டு சொத்து வரித் தொகை ரூ.1408/- நூலக வரித் தொகை ரூ.140/- ஆகமொத்தம் ரூ.1548/-ஆக வரிவிதிக்கப்பட்டு 09.04.2018ல் வசூலிக்கப்பட்டது ஆவணங்களின் மூலம் கண்டறியப்பட்டதாகவும், இதன்படி திரு தனபால், என்பவரது வீடு மறு அளவீடு செய்யப்பட்டு உரிய தொகை வரி விதிப்பு செய்யப்பட்டு வசூலிக்கப்பட்டு பேரூராட்சி கணக்கில் வரவாக்கப்பட்டுள்ளது என நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது தல ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளார்.

புத்தளம் பேரூராட்சியில் அனுமதியின்றி கட்டப்பட்ட வீடுகளுக்கு வரி விதிப்பு செய்தது தொடர்பாக முன்னாள் வரி வசூலர் திரு.S. இராதாகிருஷ்ணன் மற்றும் செயல் அலுவலர் திருமதி A.V.ருக்மணி ஆகியோர் மீது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புதுறையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு இதுவரை 34 ஆவணங்கள் கைப்பற்றப்பட்டு 22 சாட்சிகள்

விசாரிக்கப்பட்டதாகவும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இணை இயக்குநரின் கடித எண்.DE.29/2016/TP/KK நாள்.06.03.2017ம் நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இது சம்பந்தமான விசாரணை நிலுவையில் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதால், இவ்வழக்கினையும் மேற்படி விசாரணையுடன் இணைத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறைக்கு, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 11ன் கீழ் சுட்டி அனுப்பப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 30 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்

இயக்குநர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
293 M.K.N. Road,
Alandur, Chennai – 600 016.( பதிவு அஞ்சல் மூலம்)